Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 25, 2021

திங்கட்கிழமை ஒக்டோபர் 25, 2021 | ஒளி: 07 கதிர்: 135 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புதிய நிர்வாக அதிகாரி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பதினோராவது நிர்வாக அதிகாரியாக குமரேஷ் ஷயந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# கூடையை மாட்டி, சவப்பெட்டி ஏந்தி, ஒப்பாரிவைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்









### தேயிலைக் கொழுந்தைத் தின்றும் எதிர்ப்பு

உரத்தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து, மலையகத்தில் பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இராகலை மற்றும் பதுளை ஆகிய இடங்களிலும் நேற்று (24) எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் பதுளையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் முற்போக்குக்கூட்டணியினர் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இராகலையில் நேற்று (24) நடைபெற்றது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிரான மற்றுமோர் ஆர்ப்பாட்டம் ஹப்புத்தளை நகரில், நேற்றுமுன்தினம் (23) நடைபெற்றது. வடிவேல் சுரேஷ் எம்.பி தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில், சவப்பெட்டி ஏந்தியிருந்தவர்கள் ஒப்பாரி வைத்தனர். தேயிலைக் கொழுந்து பறித்துப்போடும் கூடையைத் தனது கழுத்தில் மாட்டியிருந்த வடிவேல் சுரேஷ் எம்.பி, தேயிலைக் கொழுந்துகளையும் தின்று எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

மேலதிக படங்கள்,தகவல்கள் P5

மாகாணங்களுக்கு இடையில்

## இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபடும்

■ சேஹன் செனவிரத்ன



அரச பணியாளர்களின் அத்தியாவசியப் போக்குவரத்தை இலகுவாக்குவதற்காக, இன்றிலிருந்து (25) இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்களை மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

மாகாண சபைத் தேர்தலை

# இரத்துச் செய்



### விமல் விரவன்ச அணி எடுத்துரைப்பு

ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் போது, தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் முறையே 70 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என்ற அடிப்படையில் பகிரப்படும் முறையைப் பின்பற்றுவது பொருத்தமானது என பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



### ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் கொழும்பு பேராயருக்கு பாப்பரசர் கடிதம்

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், தமது கையெழுத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

தொடர்ச்சி P2

## விசேட பூஜையில் 50 பேருக்கு அனுமதி



பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர், ஏனைய கட்டுப்பாடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்படுகின்றன. இந்நிலையில், மத வழிபாட்டு தலங்களில் நடைபெறும் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொள்வதற்கு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## துன்பத்திலும் மக்களை சிரிக்க வைக்கிறார் ஜனாதிபதி



விலைவாசி ஏற்றத்தால் ஏற்பட்ட துன்பத்தில் சிக்கி, விழி பிதுங்கும் நிலைமையில் நிற்கும் இந்நாட்டு மக்களிடம், "அரிசி-பருப்பு, விலை வாசிகளைப் பற்றிப் பேச, நான் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்படவில்லை" என்று கூறி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிரிப்பு காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஏறாவூரில் கொடூர தாக்குதல்; பொலிஸ் அதிகாரிக்குப் பிணை

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் இரண்டு இளைஞர்கள் மீது, நடு வீதியில் வைத்து கொடூரமான முறையில் தாக்குதல் மேற்கொண்ட ஏறாவூர் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆதிகோவிலடி மீனவர்கள் இருவர் இந்திய புழல் சிறையில் அடைப்பு

■ எம்.றொசாந்த்



இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையை சேர்ந்த மீனவர்கள் இருவரும், நீதிமன்ற உத்தரவின் பேரில் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## தவறான பிரசாரங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்



தம்மைப் பற்றி முன்னெடுக்கப்படும் தவறான பிரசாரங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் பி.பீ ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆரம்ப பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

ஆரம்ப பாடசாலைகள் அனைத்தும் இன்று (25) முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. ஆகையால் தமது பிள்ளைகளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பாதுகாப்புடன் அனுப்பிவைக்குமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வவுனியா ஊடகவியலாளர் ரி.ஐ.டிக்கு நாளை அழைப்பு



வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத், பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## நாளை தேர்தல் நடந்தால் அரசாங்கம் நிச்சயம் தோற்கும்



### சஷீந்திர ராஜபக்ஷ தெரிவிப்பு: ராஜபக்ஷ விமர்சனங்கள் சாதாரணமாகிவிட்டன என்கிறார்.

விமர்சனங்களுக்கு உள்ளாகுவது ராஜபக்ஷ குடும்பத்துக்கு சாதாரணமாகிவிட்டது என தெரிவித்த விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, விமர்சனங்களுக்கு மத்தியில் எமது கிராமங்களுக்கு நிச்சயம் நாம் செல்வோம் என்றார்.

தொடர்ச்சி P2

## 'ராஜபக்ஷ' பெயர் இருந்தால் வீதியில் இறங்க முடியாது

### ஹிருணிகா குற்றச்சாட்டு: கோட்டாவின் அரிசிக் கடையை சுத்திக்காட்டினார்



இன்றைய ஆட்சியாளர்களின் உருவப்பொம்மைகளை மாத்திரமே மக்கள் அடிப்பதாகவும் எரிப்பதாகவும் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, எதிர்வரும் நாள்களில் 'ராஜபக்ஷ' என்ற குடும்பப் பெயர் கொண்டவர்கள் வீதிக்கு இறங்க முடியாத நிலை ஏற்படும் என்றார்.

தொடர்ச்சி P2

## கொனுரே நீக்கம்



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து ராஜா கொலுரே நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (24) நடைபெற்ற கட்சியின் மத்திய மற்றும் அரசியல் குழுக்களின் கூட்டங்களிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அக்கட்சி அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## இ.போ.ச பஸ்கள்...

குறித்த பஸ் சேவைகள் சகல மாவட்டங்களிலும் குறைந்தது, இரண்டை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக தெரிவித்த அவர், இதில் பயணிக்கும் அரச பணியாளர்களின் அலுவலக அடையாள அட்டை கட்டாயமாக்கப்படும் என்றார்.

கண்டியில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

வைத்தியசாலை பணிப்பாளர்களின் கடிதங்களைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கு இடையில் பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான பஸ் ஒன்றை அம்பாறை பிரதேசத்தில் சோதனையிட்ட போது, அதில் சுகாதார பிரிவு பணியாளர்கள் இருவருடன் இராணுவ அதிகாரிகள் இருவர் மாத்திரமே பயணித்துள்ளனர். ஏனைய, 48 பேரும் அதிக பணம் செலவழித்து பயணித்துள்ளனர்.

எனவே, இனிமேல் போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதி பெற்ற பஸ்கள் மாத்திரமே மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க முடியும். அதேபோல் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், இதன்போது ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என்றார்.

## விசேட பூஜையில்...

இதனடிப்படையில், விசேட பூஜை வழிபாடுகளில் 50 பேருக்கு அனுமதி வழங்கப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார். விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்ற தினத்திற்கு மாத்திரமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய நாள்களில் வழிபாட்டு தலங்களில் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ள அவர், கொரோனா தொற்று மீண்டும் பரவாதிருக்கும் வகையில் செயற்படுமாறும் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் தொடர்ந்தும் நாளொன்றில் சுமார் 500 கொரோனா நோயாளர்கள் பதிவாகின்றனர் எனத் தெரிவித்த அவர், திறந்த வெளிகளில் குளிரூட்டப்பட்ட அறைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் 75 பேர் கலந்துகொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், சில ஹோட்டல்களில் இரவு நேரங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வோர் முகக்கவசமின்றி பங்கேற்பதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்று அபாயம் நாட்டில் நீடிப்பதால், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய செயற்படுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

## இரத்துச் செய்

பிரதேச சபை மட்டத்தில் முடிந்தளவு நிறைவேற்று அதிகாரத்தை பரவலாக்கல் மற்றும் தொகுதி மட்டத்தில் மக்கள் சபைகளை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியமானது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்ற விசேட குழு அதன் தலைவர், சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் அண்மையில் கூடியபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக உள்ளூராட்சிமன்ற தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் உள்ளூராட்சிமன்ற பிரதானிகளின் மாகாண சபையை மாகாண அபிவிருத்தி சபையாக மாற்ற வேண்டும். அந்த சபைகளுக்கு மக்கள் இறையாண்மையுடன் தொடர்புடைய அதிகாரங்களை மாத்திரம் வழங்குவது பொருத்தமானது. அதன் மூலம் மாகாண சபை தேர்தலை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் தேசிய சுதந்திர முன்னணி சுட்டிக்காட்டியது.

உள்ளூராட்சி அதிகார பிரதேசமொன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையான வாக்காளர்களால் கையொப்பமிடப்பட்ட கோரிக்கையின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதியின் உறுப்பினருக்கு வழங்கப்பட்ட ஆணையை இரத்துச் செய்தல் மற்றும் இடைத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தேர்தலுக்கான வேட்புமனுக்களை வழங்குவதற்கு முன்னர் தேர்தல் ஆணையாளருக்கு சொத்துகள், பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், தேர்தலுக்கு நான்கு வாரங்களுக்கு முன்னர் தேர்தல் ஆணையாளரால் அந்தத் தகவல்கள் வெளியிடப்படுவது பொருத்தமானது என்றும் ஜயந்த சமரவீர குழுவில் பிரேரணை முன்வைத்தார்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் தேர்தல் வாக்குறுதிகள் எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவற்றை சமூக உடன்படிக்கையாகக் கருதுவதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்வது பொருத்தமாகும். அதனுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு நீதிபதிகள் குழுவை நியமித்தல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகளின் தேவைப்பாடு தொடர்பிலும் அவர் வலியுறுத்தினார்

பாராளுமன்ற தேர்தலில் மக்கள் இறையாண்மை சிதைக்கப்படுவதைத் தடுக்க தேசிய பட்டியலின் மூலம் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களில் 5 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

தேர்தலின் போது செலவிட எதிர்பார்க்கும் நிதி, எவ்வாறு செலவிடப்படும் என்பதைக் காட்டும் வரவு-செலவுத் திட்டத்தை உள்ளடக்கிய பிரகடனமொன்றை தேர்தல் ஆணையாளருக்கு வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தனர்.

## நிர்வாக அதிகாரி

நல்லூர் கந்தசுவாமி கோவில் பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் ஒக்டோபர் 9ஆம் திகதியன்று இறைபதமடைந்தார்.

அன்றைய தினம் (ஒக்டோபர் 09) தொடக்கம், குமரேஷ் ஷயந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் காலம் ஆரம்பமானது.

இந்நிலையில், குமரேஷ் ஷயந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு நேற்று (24) சென்று விசேட பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் 1964 டிசம்பர் 15 முதல், இறைபதமடையும் வரை அவரே நிர்வாக அதிகாரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில்...

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து தாம் கவலையடைவதாகவும் அது தொடர்பாக தாம் பிரார்த்திப்பதாகவும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், தனது கையெழுத்தில் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சரியென நினைக்கும் சிறந்த விடயத்தை செய்யுமாறும், தாம் விசுவாசித்து செய்ய வேண்டிய நல்ல விடயத்தை கூறுமாறும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் வசிக்கும் இலங்கையர்களுடன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள், இனிமேல் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிகழ்நிலை (சூம்) ஊடாக பேராயர் கர்தினால் நேற்று முன்தினம் (23) உரையாற்றியுள்ளதுடன், இதன்போது பாப்பரசரின் கடிதம் குறித்து தெரிவித்துள்ளார்.

“நீங்கள் எனக்கு அனுப்பி வைத்த கடிதம் கிடைத்தது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பிலும் விளக்கமளித்துள்ளீர்கள் என குறிப்பிட்டுள்ள பாப்பரசர் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கவலையடைகிறேன்.

அத்துடன், தொடர்ந்து இதில் பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுவதாகவும் உறுதியளிக்கிறேன்.

தான் இது தொடர்பில் ராஜாங்க செயலாளர் கர்தினாலுடன் கதைக்கவுள்ளேன். எனக்கு நினைவு உள்ளது. சம்பவம் இடம்பெற்ற அன்று, கத்தோலிக்கர்கள் குழப்பமடையாத வகையில் நீங்கள் செயற்பட்டதுடன் இஸ்லாமியர்களுடன் நட்புறவாடினீர்கள் என்பதை நான் மறக்கவில்லை. அதேபோல் நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த விடயம். எடுக்க வேண்டிய தீர்மானங்கள் தொடர்பிலும் எனக்குத் தெளிவுப்படுத்துங்கள்” என அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கர்தினால் தெரிவித்துள்ளார்.

## ஏறாவூரில் கொடூர...

இந்த தாக்குதல் தொடர்பில் வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகின. அதனையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, உடனடியாக விசாரணைக்கு பணித்திருந்தது.

அதனையடுத்து அந்த பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் (23) ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், பிணையில் விடுதலைச் செய்யப்பட்டார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மாஅதிபருக்கு தாம் அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆதிகோவிலடி மீனவர்கள் இருவர் இந்திய புழல் சிறையில் அடைப்பு

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியை சேர்ந்த மீனவர்களான, வீ.நிமலதாஸ், த. கஜீபன் ஆகிய இருவரையும் இந்திய கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை (22) கைது செய்தனர்.

வல்வெட்டித்துறையில் இருந்து கடந்த 21ஆம் திகதியன்று கடலுக்குச் சென்றிருந்த இவ்விருவரும் இந்திய கோடியக்கரைக்கு கிழக்கே 16.5 கடல் மைல் தொலைவில் வைத்து, அவ்விருவரையும் தாம் கைது செய்ததாக இந்திய கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு மீனவர்களும், வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழு ஆய்வாளர் ஊடாக வேதாரண்யம் கடற்கரை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் வேதாரண்ய பொலிஸார், சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நீதிமன்றில் சனிக்கிழமை (23) ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிமன்றம், இரு மீனவர்களையும் எதிர்வரும் 1ஆம் திகதி வரையில் புழல் சிறையில் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையின் வடக்கு கடற்பிராந்தியத்தில் படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி உயிரிழந்த மீனவர் ராஜ்கிரனின் சடலம் நேற்று முன்தினம் (23) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## துன்பத்திலும் மக்களை சிரிக்க வைக்கிறார்...

திருவள்ளுவர் சொல்லிச்சென்ற ‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்ற வாக்கியத்துக்கு இணங்க நாமும் சிரித்து வைப்போம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறியுள்ளார்.

அரிசி, பருப்பு விலைவாசிகளைப் பற்றி பேச, தான் பதவிக்கு வரவில்லை என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் கூற்று பற்றி மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது:

கொவிட்- 19 முதல் அலையின் போது, முதன் முறையாக, நாட்டு மக்களை விளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, அன்று உரையாற்றினார். அந்த உரையில் அவர் கூறிய பிரதான விடயம் ஒன்று இருந்தது. அது என்ன?

செமன் ரின், பருப்பு, பால்மா ஆகிய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பேன். அவற்றை கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிடுவேன் எனக் கூறியிருந்தார்.

இதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. அவரது வர்த்தமானி விலைகளில் சந்தையில் பொருள்களை தேடியலைந்து மக்கள் ஏமாந்து போனதுதான் மிச்சம்.

சீனிக்கு ரூ. 49-75 என்ற மிகப்பெரிய வரி குறைப்பை ஜனாதிபதி செய்தார். வரி குறைந்தது. இதனால், சுமார் ரூ.1,595 கோடி வருமானத்தை திறைசேரி இழந்தது. ஆகா, அப்படியானால் இந்த பெரும் தொகை, பாமர மக்களுக்கு விலைக் குறைப்பாக கிடைக்கும் என நாம் எதிர்பார்த்தோம். கடைசியில், இந்த ரூ.1,595 கோடி திறைசேரிக்கும் போகவில்லை. மக்களுக்கும் கிடைக்கவில்லை. எங்கே போனது? இதுபற்றி ஜனாதிபதி இதுவரை பதில் கூறவில்லை.

இதற்கிடையில் பொருள்களை தேடி கண்டு பிடிக்கிறேன் என தனது இராணுவ அதிகாரி ஒருவரையும் நியமித்தார். அவரும் ஆலைகளை பிடிப்பேன், களஞ்சிய சாலைகளை உடைப்பேன், திறப்பேன் என்றார். ஒன்றும் பிரயோஜனம் இல்லை என்றார்.

## ஆரம்ப பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், ஒக்டோபர் 21ஆம் திகதி முதல் ஆரம்பமாகின. எனினும், சம்பள முரண்பாடு உள்ளிட்ட தமது பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய வகையில் தீர்வைப் பெற்றுத்தராமையால், அன்றையதினம் பாடசாலைக்களுக்கு செல்லமுடியாதென அதிபர்-ஆசிரியர் சங்கங்களில் சில அறிவித்திருந்தன.

எனினும், இன்றையதினம் பாடசாலைகளுக்கு சமூகமளிப்போம் என்றும் அறிவித்திருந்தன. இன்னும் சில தொழிற்சங்கங்கள் தங்களுடைய தொழிற்சங்க போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கவிருப்பதாக ஏற்கெனவே அறிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## தவறான பிரசாரங்களுக்கு...

இந்தியாவில் இருந்து உரம் கொண்டு வருவதற்காக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் நடைமுறையின் போது ஜனாதிபதி செயலாளர் பி.பீ ஜயசுந்தர அரச வங்கிக்கு தொடர்ந்தும் அழுத்தம் விடுத்திருந்ததாக பத்திரிகையொன்றில் செய்தி வெளியானது.

இந்தத் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அரச வங்கியொன்றில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பது, குறித்த வங்கிக்கும் கணக்கு உரிமையாளருக்கும் இடையிலான செயற்பாடாகும். நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய செயற்படுவது வங்கியின் பொறுப்பு என்றும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாளை தேர்தல் நடந்தால்...

பதுளையில் மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், விவசாயத்துடன் தொடர்பில்லாதவர்களும், சேதன பசளை தொடர்பில் தெளிவில்லாதவர்களும் தான் பெரும்பாலான போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

சிறந்த திட்டங்களை செயற்படுத்தும் போது சவால்களும் முதற்கட்ட தோல்விகளும் ஏற்படுவது சாதாரணமானது. தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ இந்தத் திட்டத்தை செயற்படுத்தவில்லை. நாளை தேர்தல் நடைபெற்றால் அரசாங்கம் நிச்சயம் தோல்வியடையும். விஷத்தை உண்டு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை. எனக்கு தேர்தல்வெற்றிதான் முக்கியமென ஜனாதிபதி கருதவில்லை.

மக்களின் நலனை உடல் ஆரோக்கியத்தை கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்கும் அரச தலைவர்கள் குறைவாக உள்ளனர். சேதன பசளையை கொண்டு பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையிலும் மரக்கறி விவசாயத்திலும் ஈடுபடுகிறார்கள். சேதன பசளை பயன்படுத்தி விவசாய நடவடிக்கையினை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளார்கள் என்றார்.

## ‘ராஜபக்‌ஷ’ பெயர் இருந்தால்....

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பென்டோரா அக்காவும் அவரது கணவரும் சேர்ந்து 160 டொலர் மில்லியன் மோசடியாக சம்பாதித்துள்ளனர். எனவே, பென்டோரா அக்காவின் பணத்தை எடுத்தால் உரப்பிரச்சினை, ஆசிரியர்களின் சம்பள பிரச்சினை, அரிசி பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இவர்களின் வீடு, பிள்ளைகள் உள்ளிட்டவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். எவ்வளவு சரி சம்பாதிக்கவே ஒவ்வாரு காலத்துக்கும் இந்த ராஜபக்‌ஷ குடும்பத்தினர் இலங்கைக்கு வருகிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவர்களுக்கும் இங்கிருந்து வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களுக்கும் சிறு வித்தியாசமே உள்ளது. வீட்டுப் பணிப்பெண்கள், தாம் சம்பாதிக்கும் பணத்தை இலங்கைக்கு அனுப்புகிறார்கள். ஆனால், ராஜபக்‌ஷ குடும்பத்தினர் இங்கிருந்து அமெரிக்காவுக்கு கொண்டு செல்கின்றனர்.

கடவுளே! உண்மையில் கிடைத்ததை சுருட்டிக்கொண்டு, நாட்டை விட்டு தப்பியோடுவார்கள். அவர்கள் அவ்வாறு தப்பியோடாவிட்டால் இனி ஊடக சந்திப்பை நடத்துவதில் பயனில்லை என்றார்.

## வவுனியா ஊடகவியலாளர் ரி.ஐ.டிக்கு...

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் வவுனியா அலுவலகத்துக்கு நாளை 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு சமூகமளிக்குமாறு அவருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவைத் தளமாக கொண்டு இயங்கிவரும் வறுமைக்குட்பட்ட மக்களுக்காக உதவும் சமூக ஆர்வலர் அமைப்பு ஒன்று தொடர்பான விசாரணைக்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளதாக. தெரிவிக்கப்படுகின்றது.

# 6 இந்திய கப்பல்கள் இலங்கைக்கு விஜயம்







இந்தியாவின் முதல் பயிற்சி படையணியின் 6 இந்திய கப்பல்கள், நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளன.

ஐ.என்.எஸ்.மகர், ஷர்துல் ஆகிய கப்பல்கள் கொழும்பிற்கும் ஐ.என்.எஸ்.சுஜாதா, தரங்கனி, சுதர்ஷினி, சி.ஜி.எஸ். விக்ரம் ஆகியவை திருகோணமலைக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளன.

நெருங்கிய நட்புறவை வெளிக்காட்டும் மற்றொரு சந்தர்ப்பமாக இளம் உத்தியோகத்தர்கள், பயிற்சி அதிகாரிகளின் வினைத்திறனை மேலும் விரிவாக்கும் இலக்குடன் இந்த விஜயம் அமைந்துள்ளது என இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

## அரசாங்க ஊடகங்களில் தமிழ் பிரதிநிதிகள் வேண்டும்



அரசாங்க ஊடகங்களின் ஊடாக வழங்கப்படும் தகவல்கள், நாட்டில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் சரியாகக் கொண்டு செல்லப்படவில்லை என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வெகுஜன ஊடகத்துறை அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊடகங்களின் பணிப்பாளர் சபையில் தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டும்.

நட்டத்தில் இயங்கும் அரசாங்க ஊடகங்களை மீண்டும் இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவர, ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். அரசாங்க ஊடகங்களில் படைப்பாற்றல் குறைந்து வருவதை ஏற்றுக் கொண்ட அமைச்சர், இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார்.

அரசாங்க ஊடகமொன்றைப் பராமரிப்பதற்கு ஒரு நிறுவனத்துக்கு மாதமொன்றுக்கு 35 மில்லியன் ரூபாய் செலவுசெய்ய வேண்டியிருப்பதாகவும், சில நிறுவனங்களுக்கு 45 மில்லியன் ரூபாய் வரையில் செலவாவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அரசாங்க ஊடகங்கள் வணிக ரீதியாகத் தோல்வியடைவதை அரசாங்கத்தால் தாங்க முடியாது. இதனைவிடவும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் வன்முறைகள் நிறைந்ததும், சிறுவர்களுக்குப் பொருத்தமற்ற விடயங்களுடன் கூடிய திரைப்படங்கள் விளம்பரப்படுத்தப்படுவதாகவும், அவற்றை விளம்பரப்படுத்தப் பொருத்தமான ஒளிபரப்பு நேரத்தைப் பரிந்துரைப்பதற்கு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

வடபகுதியில் உள்ளவர்களில் 85 சதவீதமானவர்கள் இந்தியத் தொலைக்காட்சிகளைப் பார்வையிடுவதற்குப் பழகியிருப்பதால் அப்பகுதிகளில் உள்ள சிறுவர்கள் மத்தியில் இந்நாட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் பொது அறிவு குறைவாகவே உள்ளது என்பதும் குழு கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

நேத்ரா அலைவரிசையின் ஊடாக முற்பகல் 4.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரை முதலாம் தரத்திலிருந்து 13வது தரம் வரையில் தமிழ் மொழி மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவதாக, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரெஜினோல்ட் குரே இங்கு கருத்துத் தெரிவித்தார்.

அரசாங்க ஊடகங்களின் ஊடாக வழங்கப்படும் தகவல்கள் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் சரியாகக் கடத்தப்படாமையே இதற்குக் காரணம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மாட்டிறைச்சி தடை விவகாரம்:

# இனவாத சிந்தனையுடன் மக்களைத் திசை திருப்ப முயற்சி

நாட்டில் விலை அதிகரிப்பு, விவசாயிகளுக்கு உரம் இன்மை உள்ளிட்ட ஏகப்பட்ட பிரச்சினைகள் மேலெலுகின்ற சந்தர்ப்பத்தில் இனவாத சிந்தனையுடன் மாட்டிறைச்சி தடை விவகாரத்தை முன்னிறுத்தி, மக்களை திசை திருப்ப ராஜபக்ஷ அரசாங்கம் முற்படுவதாக கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாட்டிறைச்சி தடை விவகாரம் குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பிரச்சினைகள் இன்று மேலெழுந்துள்ளன. அவர்களுக்கு உரத்தின் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் திட்டமிடலற்ற கட்டுப்பாடுகள் அவர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதனால் நாடு முழுவதிலும் விவசாயிகள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்நிலையில், அரசாங்கம் இவற்றைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்காது, இவ்விடயங்களை இனவாதத்தின் ஊடாகத் திசை திருப்பி, மக்களை ஏமாற்றும் வேலைகளையே தொடர்ந்தும் செய்கின்றது.



கடந்த வாரம் அமைச்சரவையில் திடீரென மாட்டிறைச்சிக்கான தடையை நிறைவேற்றிக்கொண்டுள்ளது. இதன் மூலம் இனவாதிகளை சந்தோஷப்படுத்தி, அவர்களைப் பயன்படுத்தி பிரச்சினைகளை திசை திருப்ப முயற்சிக்கப்படுகின்றது.

மாட்டிறை தடை செய்யப்படுவதால் அதனுடன் இணைந்த தொழில் துறைகள் பாதிக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்தின் மாட்டிறைச்சி தடை நோக்கம், முஸ்லிம்களை இலக்காகக் கொண்டு இருந்தாலும், பண்ணை வளர்ப்பாளர்கள், மாட்டு வியாபாரிகள், தரகர்கள் உள்ளிட்ட பெரும் தொகையான தொழில் துறையினர் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு, இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்திருக்கிறது. இந்த அரசாங்கத்துக்கு மக்களின் ஜீவனோபாயம் முக்கியமில்லை. இனவாதிகளை குசிப்படுத்தி அப்பாவி மக்களின் வயிற்றில் அடிக்கிறார்கள்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள்:

## ஒரே தினத்தில் ஒரு தடவையில் வேண்டும்

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை, ஒரு தினத்தில், ஒரே தடவையில் நடத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய பிரேரணை முன்வைத்துள்ளது.

அமைச்சர் தினேஸ் குணவர்தனவின் தலைமையிலான பாராளுமன்ற விசேட குழு கூட்டத்திலேயே, ஜாதிக ஹெல உறுமய மேற்கண்டவாறு பிரேரணை முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர் பட்டியலில் நூற்றுக்கு 25 சதவீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் போது, அது மூன்றில் ஒரு பங்காக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## சீன நிறுவன முயற்சியை தடுத்து நிறுத்துவோம்



ஆபத்தான நுண்ணுயிர்கள் உள்ளடங்கியதாக உறுதி செய்யப்பட்ட சேதன உரத்தை பலவந்தமாக இலங்கை நாட்டுக்கு வழங்குவதற்காக சீன நிறுவனத்தின் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி வேண்கோள் விடுத்துள்ளது.

சனிக்கழமை (23) மாலை நடைபெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனாவிலிருந்து ஆபத்தான நுண்ணுயிர்கள் அடங்கிய திரவ சேதன உரத்தைக் கொண்டுவரும் குறித்த கப்பலைத் துறைமுகத்துக்குள் நுழைய அனுமதிக்க வேண்டாம் என துறைமுக ஆணையக தலைவருக்கு விவசாய அமைச்சின் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகளில்

## போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை

அதிவேக நெடுஞ்சாலை கட்டணங்களுக்கான மின்னணு கட்டணத் திட்ட (ETC) முற்கொடுப்பனவு அட்டைகளை வாகன 'உமிழ்வு' சோதனை நிலையங்களில் விநியோகிக்க முடியுமா என்பதை ஆராயுமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில், நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ. ஆர். பிரேமசிறிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மின்னணு கட்டண முறை தற்போது கொழும்பு-கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் மட்டுமே பயன்படுத்தப்படுவதால், ETC முற்கொடுப்பனவு அட்டைகள்



தற்போது சீதுவ, ஜா-எல, களனி, ஹொரன சந்தியில் உள்ள நெடுஞ்சாலை அலுவலகங்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

எதிர்காலத்தில், கெரவலப்பிட்டி உள்ளக பரிமாற்றம் மற்றும் ஏனைய நெடுஞ்சாலைகளில் உள்ள உள்ளக பரிமாற்றங்களில் மின்னணு கட்டண முறைகள் (ETC) நிறுவ திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதனால் பொதுமக்கள் வாகன உமிழ்வு சோதனை நிலையங்களில் முற்கொடுப்பனவு அட்டைகளை எளிதாகப் பெற முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தால் நெடுஞ்சாலைகளில் வெளியேறும் வாயில்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

## திட்டக் கண்காணிப்பு அதிகாரி நியமனம்

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ராசிக் றியாஸ்தீன், திட்ட கண்காணிப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, தோப்பூர், தெஹிவத்த போன்ற பிரதேசங்களில் வழங்கப்படவுள்ள குடிநீர் திட்டத்துக்கான அதிகாரியாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நீர்வழங்கல் அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவால் வெள்ளிக்கிழமை (22) முதல் செயற்படும் வண்ணம் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நியமன கடிதத்தை அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சரத் ரணசிங்க, அமைச்சில் வைத்து வழங்கினார்.

## உரம், விலையேற்றத்தைக் கண்டித்து புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

விவசாயிகளுக்கு உரத்தை வழங்குமாறு கோரியும் எரிபொருள் உட்பட பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் ஊழலை நிறுத்தக் கோரியும் புத்தளம் நகரில் நேற்று (24) காலை ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

புத்தளம், கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, கருவலகஸ்வெள, ஆனமடுவ, முந்தல், மதுரங்குளி, உடப்பு, நுரைச்சோலை, தளுவ உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதில், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் எம்.ஐ.இலியாஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.எச்.எம். நியாஸ், இனோக் துஷார பத்திரன,




கிங்ஸ்லி லால் பர்னார்ந்து உட்பட புத்தளம் நகர சபை, புத்தளம், கற்பிட்டி, வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களும் பங்குபற்றியிருந்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோரின் உருவ பொம்மைகளுடன் காஸ் சிலிண்டர்களையும் கையில் ஏந்திக்கொண்டு புத்தளம் - மன்னார் வீதியிலுள்ள முத்துமாரி அம்மன் கோவிலுக்கு முன்னால் இருந்து மாட்டு வண்டி மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் புத்தளம் - கொழும்பு முகத்திடல் வரை ஊர்வலமாக சென்றது.

இதனையடுத்து புத்தளம் - கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பல வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

புத்தளத்தில் உள்ள அதிகளவிலான விவசாயிகள் ஜீவனோபாய தொழிலாக விவசாயத்தை பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் நிலையில், தமது விவசாயத்திற்கு உரம், கிருமிநாசினி இல்லாமல் தாங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

மாகாணங்களுக்கு உள்ளே

## ரயில் சேவை இன்று ஆரம்பம்

இன்று முதல் மாகாணங்களுக்குள்ளான ரயில் சேவைகளுக்காக 133 ரயில்களை ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும், இன்று முதல் பருவகால பயணச் சீட்டை கொண்டுள்ள ரயில் பயணிகளுக்கு மாத்திரமே ரயில் சேவைகள் இடம்பெறும் என்று ரயில்வே திணைக்கள பொதுமுகாயைமாளர் தம்மிக்க ஜயசுந்தர கூறினார்.

இன்று கொழும்புக்கு வரும் ரயில் அளுத்கம, அவிசாவளை, அம்பேபுஸ்ச, கொச்சிக்கடை வரையில் மாத்திரம் பயணிக்கும் என தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு




இடையிலான ரயில், சேவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கூறினார்.

கிழக்கு பறிபோகும் சந்தர்ப்பத்தில்

# மீட்பர்கள் இங்கில்லை

■ கே.எல்.ரீ.யுதாஜித்

கிழக்கின் மீட்பர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் எமது மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவர், இராஜாங்க அமைச்சர் ஆகியோர், கிழக்கு பறிபோகின்ற போராட்டங்கள் வருகின்றபோது கொழும்பிலும் இந்தியாவிலும் தங்கியிருந்து, தாங்கள் இங்கில்லை என்று கூறுகின்றனர் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காரமுனை காணிப் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

காரமுனை என்கின்ற தமிழ் பேசும் மக்களின் கிராமத்தில், திட்டமிட்ட அடிப்படையில் போலி ஆவணங்களைத் தயாரித்து, பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றுவதற்காக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மிகவும் இரகசியமான முறையில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்தில், ஏற்கெனவே இனப்பரம்பல் மாற்றப்பட்டு திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் பறிபோயிருக்கின்றன.



இருப்பது மட்டக்களப்பு மட்டும் தான். இங்கும் பெரும்பான்மை இனத்தவர்களைத் திட்டமிட்டு குடியேற்றி, இங்கும் எதிர்காலத்தில் நாங்கள் சிறுபான்மை சமூகமாக வாழ்வதை நோக்காகக் கொண்டு, நீண்டகால அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

எமது அதிகாரிகள் பலர் இது தொடர்பில் எங்களிடம் வேதனைப்படுகின்றார்கள். ஆனால், இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், உயரதிகாரிகள் சிலர் தங்களது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த விடயங்களைப் பரம இரகசியமாக வைத்துப் பாதுகாக்கின்றார்கள்.

எமது மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவர் எப்போதும் கிழக்கு மீட்பர், கிழக்கைப் பாதுகாப்பவர், கிழக்கின் இரட்சகர் போன்று பேசிக்கொண்டிருக்கின்றார். அதேபோல் எமது இராஜாங்க அமைச்சரும் கிழக்கைப் பாதுகாப்பதென்று சொல்லுகின்றார்.

ஆனால், கிழக்கு பறிபோகின்ற போராட்டங்கள் வருகின்ற போது, இவர்கள் கொழும்பிலும் இந்தியாவிலும் தங்கியிருந்து தாங்கள் இங்கில்லை என்று சொல்லுகின்றார்கள்.

இந்த விடயங்களை நாங்கள் தட்டிக் கேட்காமல் விடுகின்ற போது, எமது நிலங்கள் எல்லாம் தட்டிப் பறிக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் அம்பாறையில் கல்லோயக் குடியேற்றம், திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றம் என்பன வந்து அங்கெல்லாம் நாங்கள் அடிபட்டு வந்ததைப் போன்று மட்டக்களப்பிலும் அடிபணிய வேண்டிய நிலையே ஏற்படும்.

நாங்கள் இனவிரோதிகளும் அல்ல; இனவாதிகளும் அல்ல. ஆனால், எமது மண்ணில் எமது மக்கள் குடியிருப்பதற்கு நீங்கள் வழிவிடுங்கள். அயல்மாவட்ட, மாகாணங்களுக்கு அப்பாற்பட்டு நீங்கள் குடியேறுகின்ற விடயத்தைச் சட்டவிரோதமான செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

ஆளுநர் ஜகம்பத் பல்லினத்திற்கான ஆளுநராக இல்லாமல் தனிப்பட்ட ஓரினத்தின் ஆளுநராகவே செயற்படுகின்றார் என்றார்.



சேதனப் பசளையிட்டு பயிரிட்ட

## பாசிப் பயறு செய்கை வெற்றி

■ ஏ. எல்.எம்.ஷினாஸ்

ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைய நச்சுத்தன்மை அற்ற உணவு உற்பத்தியை அதிகரிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை முறை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பாசிப்பயறு அறுவடை ஒலுவில் பிரதேசத்தில் நேற்று (24) இடம்பெற்றது.

நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களில் இடைக்கால உப உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு அமைய விவசாய திணைக்களத்தின் அறிவுறுத்தல், வழிகாட்டலுக்கு அமைய இவ்வாறு பாசிப்பயறு பயிரிடப்பட்டதுடன் இதற்கு முற்றுமுழுதாக சேதனப் பசளை பயன்படுத்தப்பட்டது.



## சம்மாந்துறையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசினி போன்ற பிரச்சினைக்கான தீர்வு வழங்கக்கோரியும், விவசாயக் காணிகள் அபகரிப்பிற்கு எதிராகவும் சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் விவசாயிகள், நேற்று (24) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அம்பாறை மாவட்ட அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனமும் சம்மாந்துறைப் பிரதேச விவசாயிகள் அமைப்புகளும் இணைந்து ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

"விவசாயிகளை ஒடுக்காதே; விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே; சீனாவின் குப்பையை அனுமதிக்காதே; இந்தியாவின் உர திரவத்தை விவசாயிகளிடத்தில் திணிக்காதே; ஆட்சியாளர்களே இரசாயன உர அனுமதியைப் பெற்றுத்தா" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

– எம்.சி. அன்சார்

கூட்டுறவுச் சங்கங்களினூடாக

## பால்மா விநியோகம்

■ நியாஸ் ஆதம்



கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்களினூடாக பால்மாவை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்தார்.

கூட்டுறவு சேவையில் உணவு வழங்கலும் விநியோகமும் அத்தியாவசிய சேவையாக இருப்பதால், அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோக நடவடிக்கையினை கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

கல்லடி விபத்தில்

## அதிபர் படுகாயம்

■ கனகராசா சரவணன், வா.கிருஸ்ணா



மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நேற்று (24) காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஒருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்துக்கு முன்னால், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்பை நோக்கிவந்த பஸ், நாவற்குடா பிரதான வீதியில் உள்ள 'U' வளைவில் மோட்டார் சைக்கிளை திருப்ப முனைந்தவர் மீது மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்தவரை மோதிய பஸ், சிறிது தூரம் இழுத்துச்சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தின்போது, மோட்டார் சைக்கிள் முழுமையாகச் சேதடைந்துள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நொச்சிமுனையை சேர்ந்த சிவசம்பு சிவநேசதுரை என்னும் 70 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபரே படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைத்தாலேயே

# நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர்

■ க. அகரன்

பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட, அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதோடு, அவர்களுக்கு நீதியும் கிட்ட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (23) அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தயின் கொலை அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்த அநுராதபுரம் சிறைச்சாலை அரசியல் கைதிகள் எட்டுபேரின் அடிப்படை உரிமை தொடர்பான



வழக்கு, கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அதன்போது சட்டமா அதிபர் சார்பாக முன்னின்று, உதவி சொலிசிட்டர் ஜெனரல் ரஜீவ் குணதிலக்க "கைதிகள் தங்களை யாழ்ப்பாண சிறைக்கு மாற்றுமாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றதோடு அதற்கு காரணம் "அவர்கள் உறவினர்களின் உதவியை பெற்றுக் கொள்வார்கள்" என்பதாகும் என சிங்கள ஊடகம் ஒன்று வெள்ளிக்கிழமை (22 ) செய்தி வெளியிட்டிருந்தது.

இக்கூற்று உண்மையெனில், இது நியாயத் தன்மை அற்றது மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமை மீறும் மற்றும் அதனை அவமதிக்கும் செயலுமாகும் என்பதால், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கவலை அடைவதோடு, இத்தகைய கூற்றுகள் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் தன்மை கொண்டது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

சிறைக்கைதிகள் தமக்கான உதவிகளையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவர்களாவர். அதற்கு சட்டத்தில் இடமுண்டு.

அத்தோடு ஒரு நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பிட்ட ஒருவர் சட்ட உதவியோடு மேல் நீதிமன்றத்திற்கு மீண்டும் மனு செய்யும் உரிமையும் உள்ளது. இதனை தடுக்க எவராலும் முடியாது என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## மாப்பாண முதலியாரின் நினைவாக...

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக, செம்மணி வீதியின் இரு மருங்கிலும் 92 பனை வித்துகள் நாட்டும் நிகழ்வில் யாழ். மாநகர சபை மேயர் வி. மணிவண்ணன், நேற்றையதினம் (24) கலந்து கொண்டு பனை வித்துகளை நாட்டி வைத்தார்.

(படம்: எம். றொசாந்த், என். ராஜ்)



## 10 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு கிராம பகுதியில் 10 கிலோ 370 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதிகளை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 18 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், தாழ்வுபாடு கிராம பகுதியில் குறித்த இளைஞர் சனிக்கிழமை (23) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதானகே, தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கேரள கஞ்சாவினை கைப்பற்றியுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 வயதுடைய மன்னார் கீரி பகுதியை சேர்ந்த இளைஞரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த பொலிஸார், மன்னார் நீதிமன்றில் இளைஞரை ஆஜர்படுத்தவுள்ளதுடன், கஞ்சா தொகையையும் கையளிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம்

## விசேட அதிரடிப் படையால் முற்றுகை

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம், பொலிஸ் விசேட அதிரடிப் படையால் முற்றுகையிடப்பட்டு பல லீற்றர் கசிப்பு, கோடா, உபகரணங்கள் மீட்கப்பட்டதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம், கட்டைக்காடு பகுதியிலுள்ள குளத்தின் கரையோரமாக இரகசியமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், நேற்று (24) அதிகாலை 2.00 மணியளவில் சுற்றி வளைத்தனர்.

14 பரல்களில் கசிப்பு உற்பத்திக்கு தயாரான நிலையில் காணப்பட்ட 1,620 லீற்றர் கோடாவையும் கசிப்பு வடித்து கொண்டிருந்த 540 லீற்றர் கோடாவையும் வடித்த நிலையில் காணப்பட்ட 120 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணம் என்பவற்றை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீட்டனர்.

இதன் போது 33 வயதுடைய பெரிய குளம் கட்டைக்காட்டைச்சேர்ந்த சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு

## தடுப்பூசி பெறுவதில் அக்கறையில்லை

■ க. அகரன்

கொரோனா தடுப்பூசி பெறுவதில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அக்கறையற்ற நிலை காணப்படுவதாக வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சமூக செயற்பாட்டாளர் காசிநாதர் ஜெயராஜாவின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது. எனினும் தடுப்பூசி பெறுவதில் பலரும் அக்கறை காட்டியதாக தெரியவில்லை என்றார்.



## விவசாயிகள் போராட்டத்துக்கு நிர்மலநாதன் எம்.பி அழைப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தினர், இன்று திங்கட்கிழமை (25) முற்பகல் 10 மணிக்கு முன்னெடுக்கும் பேராட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த போராட்டமானது மன்னார் - உயிலங்குளம் கமநல சேவை திணைக்களத்தின் முன்பாக இடம் பெறவுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக மலையகத்தில் ஆர்ப்பாட்டங்கள்

# பதுளை, இராகலையில் முன்னெடுப்பு

மலையக நிருபர்கள்

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பதுளை, இராகலை ஆகிய இடங்களில் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, இராகலை நகரில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டிலும் பதுளையில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தலைமையிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இராகலை - உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி, பிரதான வீதியில் ஊர்வலமாக இராகலை முருகன் கொவில் வரை சென்றடைந்தது. அங்கு கோவிலுக்கு முன்பாக கூட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இராகலை நகர வர்த்தகர்கள், தமது வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவு தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளைஅத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தவும் மலையக மக்களின் இருப்பை உறுதி செய்யவும் அவர்களுடைய தொழில் பிணக்குகள் தொடர்பாகவும் பெருந்தோட்ட கம்பெனிகளின் அடாவடி நிர்வாகத்துக்கு பதிலடி தரும் நோக்கத்துடனும் உரத்தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வடிவேல் சுரேஷ் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் பதுளை நகரில் முன்னெடுக்கப்பட்டது.

ஹப்புத்தளை நகரில் இவ்வாறானதோர் ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (23) முன்னெடுக்கப்பட்டதுடன், இரண்டாம் கட்டமாக பதுளையில் நகரில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



நெனோ நைட்ரஜன் பசளை தொடர்பில்

## போதிய விளக்கமில்லை

### விவசாய சங்கம் குற்றச்சாட்டு

மொஹொமட் ஆஸிக்

நெனோ நைட்ரஜன் பசளை சுற்றாடலுக்கு தீங்கு பயக்காது இருப்பினும், அது பற்றிய போதிய விளக்கம், வழிகாட்டல்கள் என்பன விவசாயிகளுக்கு வழங்காது விட்டால் எதிர்பார்க்கும் பொருளாதார நன்மைகளை அடைய முடியாது போகலாம் என இலங்கை விவசாய சேவையின் விவசாயப்பட்டதாரிகள் சங்கம் அச்சம் தெரிவித்தது.

கண்டி, கெண்டியன் ஆர்ட் ஹோட்டலில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, அச்சங்கம் இதைத் தெரிவித்தது. மேற்படி அமைப்பின் தலைவர் எம்.சீ. ஜயசிங்க இது பற்றி மேலும் தெரிவித்ததாவது;

நெனோ தொழில் நுட்பம் என்பது இலங்கைக்குப் புதிதல்ல. ஆனால், இறக்குமதி செய்யப்பட்டுள்ள நெனோ நைட்ரஜன் பற்றிய கள ஆய்வுகள் பற்றிய தெளிவுகள் இல்லை. அதே நேரம் தொகை ஏற்றுமதி செய்கின்ற கம்பனிகளின் வழிகாட்டல் மட்டுமே உள்ளன. எனவே எடுத்த எடுப்பில் இதனைப் பயன் படுத்தாது, ஆய்வுகளுக்கு மத்தியில் பயன்படுத்துவதே, மிகச் சிறந்தது என அவர் தெரிவித்தார்.

மேலும் நெனோ நைட்ஜைன் என்பது தாவரத்தின் மேற்பரப்பிற்கு விசிறப்பட வேண்டிய ஒரு திரவம். எனவே தாவரத்தின் இலைகள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையிலே அது விசிறப்பட வேண்டும். அப்படியாயின் இலைகள் நன்கு வளர்ச்சியடைய நைட்ரஜன் தேவை. அதனை எப்படி ஏற்கெனவே வழங்குவது என்ற வழிகாட்டல் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

மேலும் ஒரு தாவரத்தின் வேர்கள் மூலமே மொத்த நைட்ரஜன் தேவையின் 90 சதவீதத்தை உள்ளெடுத்துக் கொள்ளும். மேற்படி நெனோ நைட்ரஜன் திரவத்தை இலைகள் 10 சதவீதமே எடுத்துக்கொள்ளும்.

எனவே ஒரு தாவரத்திற்கு தேவையான மொத்த நைட்ரஜனின் அளவில் 10 சதவீதத்தை வழங்குவதற்கு பாரிய செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரும். பல முறை தெளிக்க அல்லது விசிறவேண்டி வரும். அதற்கான செலவுகள், பயிற்சி, உபகரணம் என்பன தேவைப்படும். அது மட்டுமல்ல அதனை நீருடன் கலக்க வேண்டிய அல்லது நேரடியாக விசிற வேண்டிய விகிதாசாரம் எமது சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப விதந்துரைக்கப்பட வேண்டும். அதற்கான கால அவகாசம் போதாது. எனவே, எடுத்த எடுப்பில் நெனோ நைட்ரஜன் பசளை பாவிக்க அனுமதிக்காது, போதிய கால அவகாசம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மலையகத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளை

## ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி




கே.சுந்தரலிங்கம், ரஞ்சித் ராஜபக்ஸ

கொரோனா தொற்று பரவல் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையுள்ள சகல பாடசாலைகளையும் இன்று (25) முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று (24) காலை முதல் ஆரம்பப் பிரிவு கொண்ட பாடசாலைகளில் வகுப்பறைகளையும் சுற்றுப்புற சுழலினை துப்புரவு செய்யும் பணிகளில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள் இணைந்து ஈடுப்பட்டனர்.

சில பாடசாலைகளில் வகுப்பறைகள் தொற்று நீக்கம் செய்து சுத்தப்படுத்தப்பட்டதுடன் பெற்றோர்களால் விசேட சிரமதான பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதுகுறித்து, ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி. ஸ்ரீதரன் கருத்து தெரிவிக்கையில், ஹட்டன் கல்வி வலயத்தில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இன்று, தமிழ், சிங்கள மொழிமூல 134 பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

எரிபொருளை வைத்துக்கொண்டு விநியோகிக்காத

## எரிபொருள் நிலையத்துக்கு எதிராக விசாரணைகள்

சேஹ்ன் செனவிரத்ன

கண்டி, கெலிஓயா பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில், எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தும், நுகர்வோருக்கு விநியோகிக்காமை தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விலை அதிகரிப்பை எதிர்பார்த்து, குறித்த எரிபொருளை மறைத்து, நுகர்வோரை வெறுங்கையுடன் திருப்பி அனுப்பிய குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எதிராக, எரிபொருள் கூட்டுதாபனத்தால் விசாரைணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, எரிபொருள் கூட்டுத்தபான அதிகாரிகள், சம்பந்தப்பட்ட எரிபொருள் நிலையத்துக்குச் சென்று, பரிசோதித்த போது, அங்கு 18,000 லீற்றர் எரிபொருள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



கடும் மழையால்

## வெள்ளத்தில் மிதந்த மூன்று நகரங்கள்

### இராகலையில் 10 குடும்பங்கள் பாதிப்பு

ஆர்.ரமேஸ்

கந்தப்பளை, நுவரெலியா, இராகலை போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் (23) பெய்த கடும் மழை காரணமாக, விவசாய காணிகள், வீடுகள், பிரதான வீதிகள் என்பன நீரில் மூழ்கின.

சுமார் ஒரு மணித்தியாலம் இடி, மின்னலுடன் தொடர்ச்சியாகப் பெய்த பலத்த மழையால், பிரதான ஆறுகள் பெருக்கெடுத்து வெள்ளம் ஏற்பட்டதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் பிரதான வீதிகளின் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது.

மேலும் நுவரெலியா ரேஸ்கோஸ் பகுதியின் குடியிருப்பாளர்களும் வெள்ளம் அனர்த்தத்தில் இரண்டாவது முறையும் பாதிக்கப்பட்டனர்.

கந்தப்பளையில் பார்க் தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் விவசாய காணிகள், வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தது.

நுவரெலியா-உடப்புஸ்சலாவை பிரதான வீதியின் புதுரோடு, கல்பாலம் பகுதியில் சுமார் மூன்று மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு நீடித்தது.

இதேவேளை, இராகலை பிரதேசத்தில் அதிகமான மழை பதிவாகியுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய முகாமையாளர் ஆர்.அழகேகோன் தெரிவித்தார்.

இராகலை, சென் லெனாட்ஸ் தோட்டத்தில் மண்மேடு சரிவு,வெள்ளப் பாதிப்பு காரணமாக பத்து குடும்பங்களை சேர்ந்த 37 பேர் இத்தோட்டத்தின் பாடசாலையில் நேற்றுமுன்தினம் இரவு தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டனர்.

இன்று பாடசாலைகள் ஆரம்பமாக உள்ள நிலையில், பாடசாலையில் தற்காலிகமாக தங்கியுள்ளவர்களை, சென் லெனாட்ஸ் தோட்ட முன்பள்ளி ஒன்றில் பாதுகாப்பாக தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இத் தோட்டத்துக்கு பொறுப்பான, கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.







## ஆர்ப்பாட்டங்கள்...

நேற்று (24) மலையகத்தின் பல இடங்களில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதாவது அத்தியாவசிய பொருள்கள் விலை அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து, பதுளை, இராகலை நகரில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற அதேவேளை, ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவன்புர, மட்டுகல பிரதேச மக்கள், தமது தற்காலிக வீடுகளைப் புதுப்பித்துத் தருமாறு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (மலையக நிருபர்கள்)
















# மாணவர் சமூகம் தொடர்ந்தும் காவிகளாக இருக்கமுடியாது

எமது நாட்டு கல்வித்திட்டத்தின் பிரகாரம், வருடத்துக்கு காலாண்டு, அரையாண்டு, இறுதியாண்டென மூன்று பரீட்சைகள் நடத்தப்பட்டு, மூன்று மாதகாலம் விடுமுறை வழங்கப்படும். விடுமுறைக்குப் பின்னர், பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களில் பலர், பல்வேறான குழப்படிகளைச் செய்து ஆசிரியர்களிடம் திட்டுவாங்குவர்.

வீட்டிலிருக்கும் போது, பிள்ளையைக் கண்டித்து வளர்க்கவில்லையென ஆசிரியர்கள், பெற்றோர்களையும் திட்டித்தீர்த்துவிடுவர். ஆக, பாடசாலைகளில் கல்வி மட்டுமன்றி, ஒழுக்கமும் சேர்த்தே புகட்டப்படுகின்றது. பாகுபாடற்ற கல்வி வழங்கப்படும் அதேவேளை, சமூக ஒழுக்கமும் ஏற்படுத்தப்படுகின்றது.

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர், நாடெங்கும் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் இன்று (25) திறக்கப்படுகின்றன. கொரோனா அலைகளுக்குப் பின்னர், பாடசாலைகளை திறக்கும் செயற்பாடுகள் ஒக்டோபர் 21 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டாலும், அதிபர்-ஆசிரியர்களின் இணக்கத்துடன் இன்றைய தினமே ஆரம்பிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்று கல்வித்துறையில் கடும் நெருக்கடியை கொடுத்திருந்தது. பாடசாலைகளுக்குச் செல்லாமல், பரீட்சைகளில் தோற்றாமல், அடுத்தடுத்த வகுப்புகளுக்கு சகலரும் தரமுயர்த்தப்பட்டனர். ஆனால், மாணவர்கள் பாடத்திட்டத்தில் தவறவிட்ட அலகுகளைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு வகுப்புகளிலும் கடும் கவனம் செலுத்தினால் மட்டுமே, பரீட்சைகளில் திறம்பட சித்தியெய்த முடியும். அதில், சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவிருப்போர், ஒன்பதாம் தரம்முதல் கடுமையாகக் கற்கவேண்டும். இந்நிலையில்தான், கொரோனா இரண்டொரு தரங்களைத் தின்றுவிட்டது.

சிலருக்கு நிகழ்நிலையின் ஊடாகக் கற்பிக்கப்பட்டன. காலை முதல் இரவு வரையிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. இன்னுமொரு பிரிவினருக்கு நிகழ்நிலை கல்வியும் இல்லை. இது மாணவர்களிடத்தில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திவிடும். நிகழ்நிலையில் கற்பித்தலில் இருந்து தொடர்வதா? அல்லது முதலில் இருந்து ஆரம்பிப்பதா? என்றொரு சிக்கலும் இல்லாமல் இல்லை. அல்லது, கடந்த காலங்களைப் போல ஜனவரியில் இருந்து புதிய பாடத்திட்டங்களுடன் ஆரம்பிப்பதா? என்பதற்கெல்லாம் துறைக்குப் பொறுப்பானவர்களே முடிவெடுக்கவேண்டும்.

இதற்கிடையில் மாணவர்களுக்குத் தடுப்பூசியை செலுத்தும் செயற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அடிக்கொரு தடவைகள் கூறியதைப்போல, "தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுங்கள்" என, யாரும் யாருக்கும் அழுத்தம் கொடுக்கமுடியாது. ஆகையால், வீணான அச்சத்தை களைந்து, பெற்றோரின் அனுமதியுடன் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதே உசிதம்.

தடுப்பூசியை செலுத்திக்கொண்ட மாணவர்கள் வீடுகளில் இருக்க, தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாத சிறுவர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இது சிறுவர்களை நோய் காவியாக்கும் செயற்பாடாகுமென விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு உள்ளன. அந்த விமர்சனம் தொடர்பிலும் கரிசனை காட்டவேண்டும்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வீடுகளில் இருந்தமையால், ஏற்கெனவே, அணிந்த சீருடைகள் போதாமல் இருக்கும். புதிதாகத் தைப்பதற்கான வசதிகள் இருக்காது. இந்நிலையில், விரும்பிய ஆடைகளை அணிந்துவரலாமென கல்வி அமைச்சால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்பதுடன், மாணவர்களை கொரோனா வைரஸ் காவிகள் ஆக்கி விடக்கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனம் சொல்லும் எல்லாவற்றையும் கேட்கக்கூடாது. அது, சாதகமாகவும் பாதகமாகவும் உரைக்கும். எந்த முடிவு எடுப்பதற்கும் காலஅவகாசம் தேவை. அநேகர் அவசரபுத்திக்காரராகவும் சிலர் பொறுமைசாலிகளாகவும் சிலர் முடிவு எதையும் எடுக்காதவர்களாக தம்மிஷ்டப்படியும் சும்மா இருந்து விடுகின்றார்கள்.

இன்னும் ஒருசாரார், தங்கள் அறிவுநிலையை உணராமல், சின்னச் சின்ன விடயங்களுக்கே, எல்லோரிடமும் சந்தேகங்களைக் கேட்பார்கள். ஆனால், முடிவு எடுப்பதில்லை. சந்தேகத்துடனேயே காலத்தை ஓட்டிவிடுவார்கள்.

தானும் சிந்திக்காது, பெரியோரின் அனுபவ அறிவையும் நாடாது, 'புழு'ப்போல் வாழ்பவர்களும் உண்டு. வாழ்க்கையில் இலாபம்-நட்டம், இன்பம்-துன்பம் போன்றவற்றின் மூலமே, அறிவு விருத்தியடைகிறது. தேடலில்த்தான் ஞானம் தங்கியுள்ளது.

அனுபவங்கள், சுயதேடல் ஆகியவற்றின் மூலம் பிறக்கும் அறிவுதான், உண்மை எது, பொய் எது எனச் சொல்லிக்கொடுக்கிறது. அமைதியான சிந்தனை தெளிவூட்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அடி, உதை, சித்திரவதை, வன்முறை



என்.கே. அஷோக்பரன்
twitter: @nkashokbharan

மட்டக்களப்பில், உந்துருளியில் சென்ற இருவரை, போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரியொருவர் கைகளாலும் கால்களாலும், தலை, முகம், முதுகு எனத் தாக்கிய காணொளிப் பதிவு, சமூக ஊடகங்களில் வெளியாகியிருக்கிறது.

இதேவாரத்தில், அடிப்படை மனிதவுரிமை மீறல் மனுவொன்று தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில், மனுதாரரின் சித்திரவதைக்கு எதிரான உரிமை, விடுதலைக்கான சுதந்திரம் ஆகியவற்றை, இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீறினார்கள் என்று தீர்ப்பளித்ததுடன், அவ்விரு பொலிஸ் அதிகாரிகளும் மனுதாரருக்கு மொத்தமாக ஒரு மில்லியன் ரூபாய் வழங்கவேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் வன்முறை, பொலிஸ் சித்திரவதை தொடர்பிலான அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பில், உயர்நீதிமன்றம் கரிசனை மிக்க தீர்ப்புகளை, அண்மைக்காலங்களில் வழங்கி வருகின்றது. அத்துடன், பொலிஸ் சித்திரவதை, பொலிஸ் வன்முறை ஆகியவற்றைச் சாடும் வகையில், இந்தத் தீர்ப்புகளில் வலியுறுத்திச் சுட்டிக்காட்டியும் வருகின்றது.

ஆனாலும், பொலிஸ் சித்திரவதையும் பொலிஸ் வன்முறையும் தொடரத்தான் செய்கின்றன. மனித உரிமைகளை மீறினார்கள் என்று, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு, பதவி உயர்வு வழங்கும் அரசாங்கங்கள் பதவிகளில் உள்ளவரை, பொலிஸ் சித்திரவதையும் பொலிஸ் வன்முறையும் பொலிஸ் அராஜகமும் குறையும் அல்லது ஒழியும் என்று, எப்படி எதிர்பார்க்க முடியும்?

அமெரிக்காவில் இனவெறி கொண்ட பொலிஸ் அராஜகம், கறுப்பினத்தவரின் உயிர்களைப் பறித்தபோது, அமெரிக்கா கிளர்ந்தெழுந்தது. அமெரிக்காவுடன் உலகமும் சேர்ந்து கிளர்ந்தெழுந்தது. அமெரிக்க பொலிஸ் அராஜகத்தை எதிர்த்து, இலங்கையிலிருந்து குரலெழுப்பியவர்கள் கூட இருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையில் அதே அராஜகம் அரங்கேறும் போது, பலரும் அடக்கி வாசிப்பதாகவே தோன்றுகிறது. பொலிஸ் வன்முறையைத் தாம் எதிர்நோக்க வேண்டி வருமோ என்ற அச்சம் கூட, அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இது ஒரு புறமென்றால், பொலிஸ் சித்திரவதையையும் வன்முறையையும் அராஜகத்தையும் நியாயப்படுத்த முயலும் ஒரு கூட்டமும், இருந்துகொண்டுதான் இருக்கிறது. "கன்னத்தில் ஓர் அறைதானே", "சொல்லுக்கேட்காவிட்டால் அடிக்காமல் என்ன செய்வது" என்று, 'சப்பைக்கட்டு' நியாயங்களை அள்ளித்தூவவும் இங்கு ஆட்கள் இல்லாமல் இல்லை.

ஒரு தனிநபரை அடிக்க, பொலிஸ் அதிகாரி என்பவர் யார்? அவருக்கு என்ன உரிமை இருக்கிறது போன்ற கேள்விகள், இங்கு கேட்கப்பட வேண்டும். ஒரு குற்றம் புரியப்படுகிறது எனில், அதைத் தடுப்பதற்கு 'நியாயமான பலத்தை' பிரயோகிக்க மட்டுமே, தேவைகருதிய மட்டுப்படுத்தப்பட்ட இயலுமை, பொலிஸாருக்கு உண்டு.

ஒருவரைக் கைதுசெய்து, தடுத்து வைத்துவிட்டு, அவரை அடிக்கவோ, சித்திரவதைக்கு உட்படுத்தவோ, பொலிஸாருக்கோ எந்த அதிகாரிக்கோ, எந்தவித அதிகாரமும் இல்லை. இதனை, ஜனநாயக நாட்டில் வாழும் குடிமக்கள் அனைவரும் புரிந்துகொள்வது அவசியம்.

குற்றவியல் சட்டம் எப்படி இயங்குகிறது என்ற அடிப்படைப் புரிதல், அனைவருக்கும் அவசியம். தமிழ் சினிமாவைப் பார்த்துவிட்டு, அதன் ஆதிக்கத்தின் விளைவாக, குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, நியாயமான பொலிஸ் அதிகாரி அடிப்பதும், சித்திரவதைக்கு உட்படுத்துவதும், சுட்டுக்கொல்வதும் நியாயமானவை என்ற மனப்பாங்கு உருவாக்கப்படுவது, பொலிஸ் அராஜகத்தையும் சித்திரவதையையும் நியாயப்படுத்தும் மனநிலை தோன்றக் காரணமாகிறதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் சட்டத்தின்படி, ஒருவரைக் குற்றவாளி என்று தீர்மானிக்கும் அதிகாரமோ, இயலுமையோ பொலிஸாரிடம் கிடையாது. 'பொலிஸார், குற்றவாளிகளைக் கைது செய்கிறார்கள்' என்ற சொற்பிரயோகமே தவறானது. பொலிஸார் சந்தேகநபர்களை அல்லது, குற்றம் சாட்டப்பட்டவர்களையே கைதுசெய்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களை, நீதிமன்றின் முன்னர் நிறுத்துவதுதான் பொலிஸாரின் கடமை. அதன்பின்னர், தாம் குற்றம் சாட்டியவருக்கு எதிரான விசாரணையின் படியான சாட்சிகளையும் ஆதாரங்களையும், நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். குற்றம்சாட்டப்பட்டவர் குற்றவாளியா இல்லையா என்பதை, நீதிமன்றமே தீர்மானிக்கும். பல நூற்றாண்டுகளாக, வளர்ச்சியடைந்த குற்றவியல் சட்டத்தின் அடிப்படை இது.

'தனிநபரின் சுதந்திரம் முதன்மையானது' என்ற விழுமியம், குற்றவியல் சட்டத்தின் உயிர்நாடிகளில் ஒன்று! அதனால்தான் எந்த நபரும், அவருக்கு எதிரான குற்றம், நியாயமான சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்படும் வரை, நிரபராதியாகவே கருதப்படுகிறார். இந்தச் சட்ட அடிப்படைகளை அனைவரும் புரிந்துகொள்ளும் போது, பொலிஸ் சித்திரவதை, வன்முறை, அராஜகம் பற்றிய புரிதல் மேம்படும். நிற்க!

வன்முறையும் சித்திரவதையும், ஒரு சமூகப் பிறழ்வுப் பிரச்சினையாகவே இங்கே காணப்படுகிறது. கணவன், மனைவியைப் போட்டடித்தல்; பெற்றோர், பிள்ளைகளை அடித்தல் மற்றும், சித்திரவதைக்கு உட்படுத்துதல்; ஆசிரியர்கள், மாணவர்களை அடித்தல், துன்புறுத்தல், சித்திரவதைக்கு உட்படுத்துதல் எனச் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் சித்திரவதையும் வன்முறையும் சாதாரண மயமாக்கப்பட்டு விட்டதோ என்ற கேள்வியைக் கேட்பது இங்கு அவசியமாகிறது.

இந்த மனநிலைதான், ஒருவேளை, பொலிஸாரின் வன்முறை, சித்திரவதை, அராஜகத்தில், நியாயங்களைத் தேடச் செய்கிறதோ என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது.

சித்திரவதைக்கு எந்தவித நியாயமும் இல்லை என்பதை, நாம் புரிந்துகொள்ள வேண்டும். சட்ட ரீதியான தண்டனைகள் மட்டுமே, இதற்கு ஒரே விதிவிலக்கு என, சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனம் தெரிவிக்கிறது.

ஆனால், தண்டனைகள் கூட, மனிதாபிமானம் மிக்கவையாக இருக்கவேண்டும் என்று, மக்கள் எண்ணுகின்ற நாகரிக வளர்ச்சியை, நாம் பல சமூகங்களுக்கு இடையேயும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மரணதண்டனைக்கு எதிரான கடும் எதிர்ப்பு, இதற்கு முக்கிய உதாரணமாகும். ஆகவே, சித்திரவதை எந்த வகையிலும் நியாயமானதோ நியாயப்படுத்தக் கூடியதோ அல்ல!

இலங்கை பொலிஸ் என்பது, பிரித்தானிய கொலனித்துவத்தின் உருவாக்கம். இன்னொரு நாட்டின் குடிகள் மீது, அடக்குமுறையைப் பிரயோகித்த ஒரு ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலர்களாக உருவாக்கப்பட்ட படையே, இலங்கை பொலிஸ். ஆகவே, அதன் உயிரணுவிலும் உள்ளக கலாசாரத்திலும், வன்முறையும் அடக்குமுறையும் உறைந்துள்ளது. இதே நிலைமையை, நாம் இந்தியாவிலும் அவதானிக்கலாம்.

நவீன ஜனநாயகத்தின் சிவில் பாதுகாப்புப் படையாக அன்றி, ஆதிக்க சக்திகளின் அடியாட்களைப் போன்ற தன்மைகள், அவ்வப்போது வெளிப்பட்டுவிடுகிறது. இந்தச் சிந்தனையை மாற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், அந்த மாற்றங்கள் நிகழ நீண்டகாலம் தேவைப்படுகிறது.

ஏனெனில், இந்தக் கட்டமைப்பு ஓர் அழுகிய கட்டமைப்பு. இந்தக் கட்டமைப்பின் உயிரணு, கருவறை வரையில் வேரோடியுள்ளது. அழுகலின் அடிவேரைக் களையாவிட்டால், மேற்பூச்சு நடவடிக்கைகள் எவ்வளவு மேற்கொண்டாலும், உள்ளேயுள்ள அழுகலின் அழுக்கு, அவ்வப்போது வெளிப்பட்டுவிடுவது தவிர்க்க இயலாததே.

இது, இலங்கைக்கான பிரச்சினை மட்டுமல்ல; உலகளாவிய பிரச்சினை. அதனால்தான், பொலிஸ் சீர்திருத்தம் பற்றி, அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல நாடுகள் சிந்தித்து வருகின்றன.

பொலிஸ் சித்ரவதைக்கும் அராஜகத்துக்கும் வன்முறைக்கும் ஆளானால், என்ன செய்வது என்பது பலருக்கும் உள்ள சந்தேகம்.

முதலாவது, அவற்றை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் முக்கியம். அனைவர் கையிலும் அலைபேசியுள்ள நிலையில், சமூக ஊடகங்களில் நிகழ்நிலை உள்ள நிலையிலும் பொதுவெளியில் இடம்பெறும் பொலிஸ் வன்முறை, சித்திரவதைகள் போன்றவற்றை இலகுவில் பதிவுசெய்யக்கூடிய வசதி இருக்கிறது.

மேலும், தாக்குதலுக்கு உள்ளானவர்கள், வைத்தியசாலைக்கு உடனடியாகச் சென்று, மருத்துவ சிகிச்சை பெறுவதுடன், மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுதலும் மிக அவசியம். இவையெல்லாம், பொலிஸ் வன்முறை, சித்திரவதை என்பவற்றுக்கு எதிரான, பாதுகாப்பாக அமையும்.

மேலும், பொலிஸ் விசாரணையின் போது தாக்கப்பட்டால், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் போது, நீதிபதியிடம் அது பற்றித் தைரியமாகவும் யாருக்கும் பயப்படாமலும் சொல்வது முக்கியம்.

மேலும், அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவொன்றை, உயர்நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்ய விரும்பினால், நீங்கள் பொலிஸ் சித்திரவதைக்கு ஆளான தினத்திலிருந்து, ஒரு மாதத்துக்குள் அதைச் செய்வது அவசியம். ஆகவே, உடனடியாகச் சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அல்லது, மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறையிட முடியும். இவற்றை உடனடியாகச் செய்வது அவசியம்.

நீதிமன்றம் உங்களுக்கு உதவவேண்டும் என்றால், உங்கள் உரிமைகளைப் பாதுகாக்க, நீங்களும் காலதாமதமின்றிச் செயற்படுவது அவசியம். அப்படி உங்களைச் செயற்பட விடாது, எவரேனும் அச்சுறுத்துகிறார்கள் என்றால், காலத்தை விரயமாக்குவதன் மூலம், நீங்கள் சட்டத்தின் உதவியை நாடுவதை அவர்கள் தடுக்கிறார்களா என்பது பற்றியும் நீங்கள் சிந்திப்பது அவசியம்.

வன்முறையும் சித்திரவதையும் அராஜகமும் சாதாரணமானதல்ல. அவற்றை, எந்த நியாயம் சொல்லியும், ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக மாற்ற முடியாது.

## கடிதங்கள்

### ஆந்தல் ஓயா அணைக்கட்டை மழைக்கு முன்னர் திருத்தவும்

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அம்பாறை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள ஆந்தல் ஓயா அணைக்கட்டு, 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் உடைப்பெடுத்திருந்தது. ஆனால், அது இதுவரையில் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இந்த அணைக்கட்டைப் பிரதான வீதியாகப் பயன்படுத்திவரும் மக்களும் விவசாயிகளும், பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆந்தல் ஓயா ஆற்றின் அணைக்கட்டின் ஒருபகுதி, சேதமடைந்து உள்ளமையால், றாணமடு, பூச்சிக்கூடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள், போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமைக்குள் கடந்த ஒரு வருடமாகத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

றாணமடு, பூச்சுக்கூடு பிரதான வீதியில் உள்ள ஆந்தல் ஓயாவின் அணைக்கட்டு, வருடாந்தம் மாரி மழைவெள்ளத்தில் சேதமடைவது வழமை. ஆனால், தற்போது அணைக்கட்டின் ஒருபகுதி முற்றாகவே சேதமடைந்துள்ளது.

தற்போது, பெரும்போக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்படும் நிலையில், குறித்த அணைக்கட்டு உடைப்பெடுத்தால், தமது விவசாய செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுவிடும்; இதனால் 500 இற்கு மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் பாதிப்படைந்துவிடும் என, அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வருடம் மாரிமழை வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னர், குறித்த அணைக்கட்டை செப்பனிட்டு, விவசாயத்துக்கும் போக்குவரத்துக்கும் வழிசமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உடன் முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

வ. சக்தி

பெருந்தோட்ட துரைமார் சம்மேளனத்தின் முடிவுக்கு

# அரசாங்கம் பாராட்டு

**தொழில் நடவடிக்கையை ஆரம்பிப்பதை உறுதி செய்யுமாறு அவசர கோரிக்கை**

தேயிலைச் செய்கைக்கு நைட்ரஜன் உரங்களை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவுக்கு பாராட்டைத் தெரிவித்துள்ளதுடன், தேயிலைச் செய்கைத்துறை உடனடியாக உரப் பயன்பாட்டை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உரிய விநியோகங்களை விரைவாக மேற்கொள்ளுமாறு பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் கோரியுள்ளது.

வர்த்தக ரீதியான தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் பலசரக்கு பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடும் பிராந்திய பெருந்தோட்ட சங்கங்களுக்கு உர வகைகள் கிடைக்காததால் முக்கியமான தொழில் வளர்ச்சி நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகியுள்ளன.

இந்த நடவடிக்கைகளால் முதிர்ச்சியடைந்த மற்றும் முதிர்ச்சியடையாத தேயிலைக்கான உரத்தின் நிலையான பயன்பாடுகள், தேயிலை மறுசீரமைப்பு மற்றும் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி தொழிற்றுறையை பராமரிக்க இன்றியமையாதது. இது 2020ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாயில் 1.24 பில்லியன் அமெரிக்க டொலர் பங்களிப்பு செய்தது.

"இந்தத் தாமதமான கட்டத்தில் கூட, அரசாங்கத்தின் நடைமுறையான முடிவை நாங்கள் பாராட்டுகிறோம், இது உற்பத்திச் செலவு அதிகரிப்பு, தொற்றுநோயால் ஏற்படும் இடையூறுகள் உட்பட பல சவால்களை எதிர்கொள்ளும் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு மிகவும் தேவையான ஊக்கத்தை அளிக்கிறது" என பெருந்தோட்ட துரைமார் சம்மேளனத்தின்



ஊடகப் பேச்சாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை கூறினார்.

உரத்தைப் பொறுத்தவரையில் ஒரு நிலையான தீர்வாகவுள்ள தேயிலைத் உற்பத்தி, நாட்டிற்கு மிக முக்கியமான அந்நிய செலாவணியை ஈட்டி பொருளாதாரத்திற்கு பங்களிக்க உதவும். 2021 மே மாத தொடக்கத்தில் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து, போதுமான இரசாயன உரம் மற்றும் விவசாயத்திற்கான இரசாயன உர வகைகளைப் பெறுவதில் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் கடுமையான சவால்களை எதிர்கொண்டன.

தேயிலை, இறப்பர் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளால் (RPC) பயிரிடப்பட்ட இரண்டு முக்கிய பயிர்கள் - குறிப்பாக பாதிக்கப்பட்டன. இறப்பருக்கான உரத்தைப் பொறுத்தவரை ஒரு தீர்வு இன்னும் அறிவிக்கப்படவில்லை. இது நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது.

தோட்டத் துறை தாவர ஊட்டச்சத்தின் உகந்த அளவைப் பராமரிக்க முடிகிறது என்பதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், களைகள், பூச்சிகளைக் கட்டுப்படுத்த மற்ற அத்தியாவசிய உள்ளீடுகளைப் பயன்படுத்துவதற்கான தெளிவுபடுத்தல்கள் குறித்து தொழில்துறை காத்திருக்கிறது.

குறிப்பாக 1800 களின் பிற்பகுதியில் இலங்கையின் கோப்பி தோட்டங்களை நீக்கிய, 'கோப்பி துரு ப்ளைட்' இன் அளவில் ஏற்கெனவே தொற்றுநோய் விகித்தை எட்டிய 'பெஸ்டலோடியோப்சிஸ்' என்ற பூஞ்சை நோயால் இறப்பர் தொழில் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சந்தை விருப்பங்களின் அடிப்படையில், வாங்குபவர்கள் இலங்கைத் தேயிலையின் தரம், சுவை போன்றவற்றுடன் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட திரவ குணாதிசயங்களுடன் தொடர்புபடுத்துகின்றனர்; அவை உரங்கள் போன்ற தாவர ஊட்டச்சத்துக்களால் கணிசமாக பாதிக்கப்படுகின்றன. இந்த முக்கிய பண்புகள் மாற வேண்டும் என்றால், இலங்கை கடுமையாக வென்ற சர்வதேச சந்தைகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், கடுமையான சோதனைக்குப் பிறகு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் (TRI) அங்கீகரிக்கப்பட்ட தேயிலை கொழுந்துகளுக்கு பயன்படுத்தப்படும் தாவர ஊட்டச்சத்துக்களின் தீங்கு விளைவிக்கும் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறிப்பிடுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும் தொழில்துறை சுட்டிக்காட்டியது.




அல்டிமேட் சம்பியன் – உபுல் பிரியந்த மற்றும் சம்பியன் ஒவ் சம்பியன்ஸ் – வி.பி. யாலனி

கிரிஷான் பாலேந்திரா – ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தவிசாளர்

சுரேஷ் ராஜேந்திரா – ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிதிச் சேவைகள் தலைவர்

ஜுட் கோம்ஸ் – யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி

நிகழ்வை தொகுத்து வழங்கிய – ஸ்டெஃபனி சிறிவர்தன, சாரங்க திசாசேகர மற்றும் நிரஞ்ஜனி சண்முகராஜா

இசை நிகழ்ச்சி – யொஹானி மற்றும் சதீசன்

யூனியன் அஷ்யூரன்ஸ்

# வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, தனது வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை அண்மையில் மெய்நிகர் நிகழ்வாக கொண்டாடியது. தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் மெய்நிகர் நிகழ்வாக கொண்டாடப்பட்ட இந்த வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது, முகவர், பாங்கசூரன்ஸ், கூட்டாண்மை விற்பனை செயலணி ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றியிருந்த ஊழியர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது.

3,000 க்கும் அதிகமானவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தவிசாளர் கிரிஷான் பாலேந்திரா, நிதிச் சேவைகள் பிரிவின் தலைவர் சுரேஷ் ராஜேந்திரா, யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2020 ஆம் ஆண்டில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த நிறுவனத்தின் ஆலோசகர்கள், காப்புறுதி உறவு பேண் அதிகாரிகள், அணித் தலைவர்கள், நாடளாவிய ரீதியிலான பிராந்திய முகாமையாளர்கள், வலய முகாமையாளர்கள், கூட்டாண்மை மற்றும் பாங்கசூரன்ஸ் வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் என 700 க்கும் அதிகமானோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "2020 ஆம் ஆண்டு இலங்கையைப் பொறுத்தமட்டில் சவால்கள் நிறைந்த வருடமாக அமைந்திருந்தது. நாட்டில் தொற்றுப் பரவலின் தாக்கம் மிகவும் மோசமானதாக அமைந்திருந்தது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும், அணியால் சிறந்த பெறுபேறுகளை எய்த முடிந்தது. யூனியன் அஷ்யூரன்சுக்கும் சாதனை மிகுந்த பெறுபேறுகளை பதிவு செய்ய ஏதுவாக அமைந்திருந்தது. இன்று, இலங்கையில் காணப்படும் வலுமையான புதிய வியாபார தவணைக் கட்டணங்கள் பிரிவில் சிறந்த ஐந்து செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் வேகமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி நிறுவனமாக நாம் திகழ்கின்றோம். நிறுவனம் 13 பில்லியன் GWP பெறுமதியைக் கடந்திருந்தது. 172 MDRT தகைமையாளர்களையும் பதிவு செய்திருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸ் வரலாற்றில் இது மிகவும் உயர்ந்த எண்ணிக்கையாகும். மேலும், நிறுவனத்தின் பாங்கசூரன்ஸ் விநியோக பிரிவு கடந்த காலங்களில் வளர்ச்சியைப் பதிவு செய்து, இலங்கையின் முதல் தர சேவை வழங்குநராக திகழ்கின்றது. யூனியன் அஷ்யூரன்ஸில் காணப்படும் சிறந்த குழுநிலை செயற்பாட்டின் பயனாக எம்மால் இந்த சிறந்த சாதனைகளை எய்த முடிந்துள்ளது. அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, சகல அணி அங்கத்தவர்களுக்கும் எனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

2020ஆம் ஆண்டில், யூனியன் அஷ்யூரன்ஸ் பெருமைக்குரிய 24 விருதுகளை சுவீகரித்திருந்தது. இதனூடாக ஆண்டின் அதிகளவு விருதுகளை வென்ற ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராக LMD இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, ஆண்டின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம், ஆண்டின் சிறந்த வாடிக்கையாளர் சேவை காப்புறுதி வழங்குநர், புத்தாக்கமான டிஜிட்டல் காப்புறுதி சேவை வழங்குநர் ஆகிய விருதுகளையும் பெற்றிருந்தது.

இந்த மெய்நிகர் நிகழ்வை விறுவிறுப்பானதாக அமைந்திருக்கச் செய்யும் வகையில், சிறப்பு திறமை வெளிப்படுத்தல்களாக யொஹானி மற்றும் சதீசனின் இசைக் கச்சேரி இடம்பெற்றதுடன், நிகழ்வை நிரஞ்ஜனி சண்முகராஜா, சாரங்க திசாசேகர, ஸ்டெஃபனி சிறிவர்தன ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

சென்னை

தி.மு.கவினருக்கு

# வட்டியும் முதலுமாக திருப்பி கொடுக்கப்படும்



பாரதிய ஜனதா கட்சி மீது கைவைத்தால், திராவிட முன்னேற்ற கழகத்துக்கு வட்டியும் முதலுமாக திருப்பி கொடுக்கப்படும் என பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவையில் செய்தியாளர்களை சந்தித்த அவர், தீபாவளி இனிப்பு வாங்குவதற்காக, ஒரு சாதாரண கடைக்கு சென்றபோது, "ஒரு நாள் எவ்வளவு விற்று முதல் செய்வீர்கள்" எனக் கேட்டதற்கு, "நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம்" என்றார். நம்முடைய போக்குவரத்து துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், 100 கோடிக்கு மேல் விற்று முதல் செய்யும் நிறுவனங்களிடம் தான் தீபாவளி இனிப்பு வாங்குவதாக கூறுகிறார்.

தமிழகத்தில் கட்டுமணி, கமிஷன் மணி, ஊழல் ஆரம்பித்து விட்டதாக நிறைய கட்டுரைகள் எழுதப்படுகின்றன. இன்னமும் தமிழக முதலமைச்சர் மௌனம் காண்பிப்பது ஏன்? ஆதி திராவிட அமைச்சர் கயல்விழி வீட்டில் ஆதி திராவிடர் விடுதியில் பணி செய்யக்கூடிய உறுப்பினர்களை நேர அட்டவணை போட்டு வேலை வாங்கப்படுகிறது. ஆட்சி அமைத்து 5 மாதங்கள் தான் ஆகிறது. அதற்குள் இவ்வளவு பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன எனத் தெரிவித்தார்.

ஜாலியான்

விவசாயிகளின் போராட்டத்துக்கு

# பேச்சுவார்த்தை மூலம் முடிவு கட்டுவோம்



பஞ்சாப் விவசாயிகள் சர்ச்சைக்குரிய மூன்று விவசாய சட்டமூலங்களை எதிர்த்துப் போராடி வருகின்றனர். தற்போது பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் சன்னி பஞ்சாப் விவசாயிகள் போராட்டத்தை பார்த்து, வாகனத்தை நிறுத்தி அவர்களை நேரில் சந்தித்து, தான் விவசாயிகளுக்கு ஆதரவாக மத்திய அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக உறுதி அளித்துள்ளார்.

முன்னதாக பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சர்ச்சைக்குரிய 3 விவசாய சட்டமூலங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்தச் சட்டமூலங்களை எதிர்த்து விவசாயிகள் கடந்த ஓராண்டாக தொடர்ந்து பஞ்சாப், ஹரியானா, புதுடெல்லி உள்ளிட்ட பகுதிகளில் போராடி வருகின்றனர்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடியை நேரில் சந்தித்துப் பேச விவசாய சங்கங்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. பஞ்சாப் முன்னாள் முதலமைச்சர் அமரீந்தர் சிங் பதவி விலகலை அடுத்து, காங்கிரஸ் கட்சி சரண்ஜித் சிங் சன்னியை புதிய முதலமைச்சராக நியமித்தது.

இதனை அடுத்து அவர் பிரதமர் மோடியை புதுடெல்லியில் சந்தித்து விவசாய சட்டமூலங்களை வாபஸ் பெறும்படி கேட்டுக் கொண்டார். தற்போது பொது இடங்களில் விவசாயிகள் தொடர்ந்து பேரணிகள், போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். பஞ்சாப் மாநிலத்தின் ஜாலியன் கிராம பகுதியில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாகச் சென்ற முதலமைச்சர், போராடும் விவசாயிகளைக் கண்டு தான் பயணித்த வாகனத்தை நிறுத்தி, விவசாயிகளுடன் பேசிய அவர், பிரதமர் மோடியிடம் விவசாய சட்டமூலங்களை நீக்கக்கோரி தொடர்ந்து கோரிக்கை வைத்து வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகம்

பெற்றோல், டீசல் விலை ஏற்றம்

# அரசாங்கத்தின் பேராசையே காரணம்



பெற்றோல், டீசல், எரிவாயுவின் விலை ஏற்றத்துக்கு மத்திய அரசாங்கத்தின் பேராசையே காரணம் என, காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் தமிழ் வர்த்த சங்கம் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்வில் பங்கேற்ற முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், வரிவிதிப்பு என்பது ஓர் எல்லைக்குள் மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, ஒரே பொருளின் மீது 33 சதவிகித வரியை விதிப்பது தவறானது என சாடினார். பல காரணங்களால் உலக வர்த்தகம் முடங்கியுள்ள நிலையில், மக்களின் கடன் சுமை அதிகரித்திருப்பதும், தனிமனித சேமிப்பு குறைந்திருப்பதும் நாட்டுக்கே ஓர் எச்சரிக்கை மணி என முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நாகாவோன்

# மதத்தை மறைத்து திருமணம் செய்தவர் கைது

தனது உண்மையான மதத்தை மறைத்து, இந்துவாக நடித்து திருமணம் செய்து மோசடி செய்ததாக, அசாமைச் சேர்ந்த பெண் அளித்த புகாரில், அவரது கணவனை பொலிஸார் கைது செய்துள்ளனர். இங்குள்ள தேமாஜி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், தன் கணவன் மீது புகார் அளித்துள்ளார். அதில் அந்தப் பெண் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் வேலை பார்த்தபோது அசாமின் ஹோஜாய் மாவட்டத்தைச் சேர்ந்தவருடன் பழகினேன். தன்னை இந்து என்று கூறியதால் அவரை காதலித்து திருமணம் செய்தேன். ஆனால் திருமணத்துக்குப் பின் அவர் உடல் ரீதியிலும் மன ரீதியிலும் கொடுமைப்படுத்தத் தொடங்கினார். இந்நிலையில் அவர் தமிழகத்தில் இருந்து தப்பிச் சென்றார். விசாரித்தபோதுதான், அவர் முஸ்லிம் என்பதும், தன் மதத்தை மறைத்து மோசடி செய்து திருமணம் செய்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. இவ்வாறு புகாரில் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 'லவ் ஜிகாத்' எனப்படும், திருமணம் செய்வதற்காக இந்துப் பெண்களை காதலித்து மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் குற்றத்தில் ஈடுபட்டு உள்ளதாக, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை




# மன்சூர் அலிகான் வீட்டுக்குச் சீல்

சென்னையிலுள்ள நடிகர் மன்சூர் அலிகான் வீட்டிற்கு, மாநகராட்சி அதிகாரிகள் 'சீல்' வைத்துள்ளனர்.

விஜயகாந்த் நடிப்பில் வெளியான கேப்டன் பிரபாகரன் படத்தின் வாயிலாக, திரைத்துறையில் பிரபலமானவர் நடிகர் மன்சூர் அலிகான்,(வயது 59). இவர், பல்வேறு மொழிகளில் 250க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவருக்கு, சென்னை அண்ணா நகர் மண்டலம் 105ஆவது வார்டு, சூளைமேடு, மேற்கு பெரியார் பாதையில் 2,500 சதுர அடியில் வீடு உள்ளது. இந்த வீடு, அரசின் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து கட்டியிருப்பதாக பல ஆண்டுகளாக குற்றச்சாட்டு இருந்தது. நீதிமன்றத்திலும் வழக்கு நடந்து வந்தது. இது தொடர்பாக, 2019ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் அவர் தொடர்ந்த வழக்கும் தள்ளுபடியானது. இந்த நிலையில், புறம்போக்கு நிலத்தை மீட்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து, மாநகராட்சி அதிகாரிகள், வீட்டில் இருந்தவர்களை அப்புறப்படுத்தி, பூட்டி 'சீல்' வைத்தனர்.

புதுடெல்லி

# ஆறு வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

**இளைஞன் தலைமறைவு**



புதுடெல்லியில் இளைஞரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட, 6 வயது சிறுமியின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் பொலிஸார் தெரிவிக்கையில், இங்குள்ள ரஞ்சித் நகர் பகுதியில் நேற்று முன்தினம் (23) ஆறு வயது சிறுமி, தன் வீட்டுக்கு வெளியே விளையாடிய போது, அங்கு வந்த இளைஞர், சிறுமியை அன்பாகப் பேசி அழைத்து சென்றுள்ளார். பின், ஆள்நடமாட்டம் இல்லாத இடத்துக்கு சென்று, பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். பின் வீட்டுக்கு அருகில், அந்த சிறுமியை விட்டுச் சென்றுள்ளார். அழுதபடி வீட்டுக்கு வந்த அச்சிறுமியின் உடலில் இருந்து இரத்தம் வெளியேறியதைப் பார்த்த அவரது பெற்றோர், உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து பெற்றோர் அளித்த புகார் அடிப்படையில், பொலிஸார் விசாரித்து வருகின்றனர். தலைமறைவான உள்ள இளைஞரை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

சீனா

# வீட்டுப்பாடங்களுக்கு சீனாவில் தடை

சீனாவில் அண்மைக்காலமாக சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரையிலானோருக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலான செயற்பாடுகளுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்து வருகின்றது.

அந்தவகையில், பாடசாலைச் சிறுவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் அவர்களுக்கு வீட்டுப்பாடங்கள் வழங்குவது, சிறப்பு வகுப்புகள் நடத்துவது உள்ளிட்ட நடைமுறைகளைத் தடை செய்வதற்கான சட்டவரைபை சீனா தயாரித்துள்ளது.



மேலும் சிறார்கள் இணையவெளியில் அதிக நேரம் செலவிடுவதைத் தவிர்க்க, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தமது நேரத்தைச் செலவிடுவதோடு, அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதில் கவனம் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

# வானிலை அறிக்கையில் ஆபாசப் படம்

அமெரிக்காவில் பிரபல தொலைக்காட்சி அலைவரிசையொன்று வானிலை அறிக்கையின் போது ஆபாசப் படமொன்றை ஒளிபரப்பிய விநோத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 17ஆம் திகதியன்று உள்ளூர் நேரப்படி மாலை 6.30 மணிக்கு ஒளிபரப்பிய வானிலை அறிக்கையின் போதே, சுமார் 13 செக்கன்களைக் கொண்ட ஆபாசப் படம் தவறுதலாக ஒளிபரப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பார்வையாளர்களை முகம் சுளிக்கச் செய்யவே குறித்த தொலைக்காட்சி அலைவரிசை மீது புகார்கள் குவிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தொலைக்காட்சி நிர்வாகத்தினர் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரான்

# பதவியேற்பு விழாவில் ஆளுநரை அறைந்த நபர்

ஈரானில் பதவியேற்பு விழாவில் மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த ஆளுநரை மர்மநபர் ஒருவர் திடீரென அறைந்த சம்பவம் அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான், கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தின் புதிய ஆளுநராக அபிதின் கோரம் என்பவர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது பதவியேற்பு விழாவில் அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, திடீரென மேடையில் தோன்றிய மர்மநபர் ஆளுநரின் பின்னந்தலையில் பளார் என அறைந்தார்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த பாதுகாப்புப் பணியில் இருந்த வீரர்கள் குறித்த நபரை அங்கிருந்து அப்புறப்படுத்தி விசாரணை மேற்கொண்டனர்.



விசாரணையில் அவரின் பெயர் அயுப் அலிசாதே என்பது தெரியவந்துள்ளது. எனினும் இத் தாக்குதலுக்கு சரியான காரணம் தெரிவிக்கப்படவில்லை

இந்நிலையில், இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஆளுநர், "சம்பந்தப்பட்ட நபர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் சிரியாவில் இருந்தபோது எதிரிகளால் சூழப்பட்டு ஒரு நாளைக்கு 10 முறை சவுக்கடி வாங்கி இருக்கிறேன். அந்த எதிரிகளுக்கு இணையாக இவரைக் கருதுகிறேன். இருப்பினும் இவரை மன்னிப்போம்" என்றார்.



அமெரிக்கா

# வெங்காயத்தால் பரவும் கொடிய நோய்

அமெரிக்காவில், வெங்காயத்துடன் தொடர்புடைய சல்மொனெல்லா (salmonella )என்ற பக்றீரியா நோய்த் தொற்றுப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவின் சிவாவா நகரத்தில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயங்களில் இருந்தே இத் தொற்றுப் பரவிவருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையில் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் உள்ளிட்ட வெங்காயங்களை மக்கள் யாரும் பயன்படுத்த வேண்டாம் என அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க நோய் தடுப்பு மையம் வெளியிட்ட அறிக்கையில் 'இந்நோயால் 37 மாநிலங்களில் 650 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 129 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டெக்சாஸ், ஒக்லஹோமாவில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இதுவரை எந்தவோர் உயிரிழப்பும் ஏற்படவில்லை.

இந்நோயானது முதலில் குடலைப் பாதிப்பதோடு, இரைப்பையில் நோய் ஏற்படவும் வழி வகுக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களிடம் வயிற்றுப் போக்கு, காய்ச்சல், வயிற்று பிடிப்புகள் போன்ற அறிகுறிகள் தென்பட்டுள்ளன. மேலும் இத் தொற்று 6 மணி நேரம் முதல் 4-7 நாள்கள் வரை நீடிக்கலாம்' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நைஜீரியா

# சிறையில் வெடிகுண்டுத் தாக்குதல்

## 800 கைதிகள் தப்பியோட்டம்

நைஜீரியாவின் ஒயோ மாகாணத்தில் உள்ள சிறையில் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 800 கைதிகள் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற இத்தாக்குதலில் சிறையைச் சுற்றிவளைத்த பயங்கர வாதிகள் குண்டுகளைக் கொண்டு சிறைச் சுவர்களைத் தகர்த்து, கைதிகளைத் தப்ப வைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தப்பிச் சென்றவர்களில் 262 பேரை மீண்டும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் ஏறத்தாழ 575 பேரைத் தேடும் பணி இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் இவ்வருடத்தில் 3 ஆவது முறையாக சிறை தகர்க்கப்பட்டு கைதிகள் தப்பிச்சென்றுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளதென அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை



ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு- 20 உலகக் கிண்ணத் தொடரின் குழு ஒன்றின் பங்களாதேஷுடனான சுப்பர் 12 போட்டியில் இலங்கை வென்றது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: இலங்கை

பங்களாதேஷ்: 171/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் நைம் 62 (52), முஷ்பிக்கூர் ரஹீம் ஆ.இ 57 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாமிக கருணாரத்ன 1/12 [3], லஹிரு குமார 1/29 [4], தசுன் ஷானக 0/14 [2])

இலங்கை: 56/4 (8.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அஸலங்க ஆ.இ 80 (49), பானுக ராஜபக்ஷ 53 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 2/17 [3], முஸ்தபிசூர் ரஹ்மான் 0/22 [3], மஹெடி ஹஸன் 0/30 [4])

**போட்டியின் நாயகன்: சரித் அஸலங்க**

இதேவேளை, குறித்த குழுவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியன்களான மேற்கிந்தியத் தீவுகளை இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

மே. தீவுகள்: 55/10 (14.2 ஓவ. ) (பந்துவீச்சு: 4/2 [2.2], மொயின் அலி 2/17 [4], டைமல் மில்ஸ் 2/17 [4], கிறிஸ் ஜோர்டான் 1/7 [2], கிறிஸ் வோக்ஸ் 1/12 [2])

இங்கிலாந்து: 56/4 (8.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் ஆ.இ 24 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 2/24 [4], ரவி ராம்போல் 1/14 [2], ஒபெட் மக்கோய் 0/12 [2])

போட்டியின் நாயகன்: மொயின் அலி

இந்நிலையில், அபு தாபியில் நடைபெற்ற இன்னொரு இக்குழுப் போட்டியில் தென்னாபிரிக்காவை அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 118/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஏய்டன் மர்க்ரம் 40 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 2/19 [4], அடம் ஸாம்பா 2/21 [4], மிற்செல் ஸ்டார்க் 2/32 [4], பற் கமின்ஸ் 1/17 [4], கிளென் மக்ஸ்வெல் 1/24 [4])

அவுஸ்திரேலியா: 121/5 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவ் ஸ்மித் 35 (34), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 24 (16), மத்தியூ வேட் ஆ.இ 15 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்றிச் நொர்ட்ஜே 2/21 [4], ககிஸோ றபாடா 1/28 [4], தப்ரையாஸ் ஷம்சி 1/22 [4], கேஷவ் மஹராஜ் 1/23 [4], டுவைன் பிறிட்டோரியஸ் 0/26 [3.4])

போட்டியின் நாயகன்: ஜொஷ் ஹேசில்வூட்






இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வட்:.போர்ட்டிடம் தோற்ற எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் அவ்வணியை வட்ஃபோர்ட் வென்றது.

வட்ஃபோர்ட் சார்பாக, ஜோஷுவா கிங் மூன்று கோல்களையும், ஜுராஜ் குக்கா, இமானுவேல் பொனவெந்துரே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாக, டொம் டேவிஸ், றிஷலிஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



# சிற்றிக்குச் செல்லும் க்றூஸ்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டின் மத்தியகளவீரரான டொனி க்றூஸை, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியில் இணையுமாறு அதன் முகாமையாளரான பெப் குவார்டியோலா வினவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

31 வயதான க்றூஸ், குவார்டியோலாவின் கீழ் பயேர்ண் மியூனிச்சில் இருக்கும்போது விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரை றியல் மட்றிட்டுடன் க்றூஸ் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# எவெர்ற்றன் செல்லும் லிங்கார்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான ஜெஸி லிங்கார்ட்டைக் கைச்சாத்திடுவதில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றன் முன்னிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், 28 வயதான லிங்கார்ட்டைக் கைச்சாத்திட மற்றைய பிறீமியர் லீக் கழகங்களான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட், நியூகாசில் யுனைட்டெட் ஆகியனவும் போட்டியிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிங்கார்ட்டுடனான யுனைட்டெட்டின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 25 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.